A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 75 / 2021</u>**

திரு. R. வெங்கடசாமி,
s/o. ரங்கசாமி,
R.வெள்ளோடு கிராமம்,
வேடசந்தூர் தாலுக்கா,
திண்டுக்கல் மாவட்டம். ………மேல்முறையீட்டாளர்

(Rep by திரு. N. பழனிசாமி)

எதிர்

1. செயற்பொறியாளர்/வடக்கு/திண்டுக்கல்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மீனாட்சிநாயக்கன்பட்டி அஞ்சல்,
திண்டுக்கல் – 624 002.

2. உதவி செயற்பொறியாளர்/குஜிலியம்பாறை,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திண்டுக்கல் மெயின் ரோடு,
குஜிலியம்பாறை – 624 703.

3. உதவி மின்பொறியாளர்/சத்திரப்பட்டி,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11KV SS வளாகம் சத்திரப்பட்டி,
வேடசந்தூர் தாலுக்கா, திண்டுக்கல் – 624 620.

…… எதிர்மனுதாரர்கள்

(திரு S. பிச்சை, உதவி செயற்பொறியாளர்/குஜிலியம்பாறை
திரு R. ராமசுப்பிரமணியன், உதவி மின்பொறியாளர்/சத்திரப்பட்டி)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 27-09-2021</u>**

**<u>கேட்புரை நாள்: 17-11-2021</u>**

**<u>ஆணை நாள்: 11-02-2022</u>**

27.09.2021 அன்று பெறப்பட்ட திரு. R. வெங்கடசாமி, s/o. ரங்கசாமி, R.வெள்ளோடு கிராமம், வேடசந்தூர் தாலுக்கா, திண்டுக்கல் மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 75/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 16.11.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

சர்வே எண் 644-3B-இல் உள்ள தனது தோட்டத்திற்கு இலவச மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 சர்வே எண் 644-3B-இல் உள்ள தனது தோட்டத்திற்கு இலவச மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்தாகவும், ஆனால் தனக்கு மின் இணைப்பு கிடைக்கப்பெறவில்லையெனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 இலவச மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 22.09.2020 அன்று அணுகியுள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம் 06.07.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **<u>மன்றத்தின் தீர்வு:</u>**

திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 06.07.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>மன்றத்தின் தீர்வு:</u>*

*திரு.வெங்கடசாமி த/பெ.ரெங்கசாமி நாயக்கர், ஆர்.வெள்ளோடு, வேடசந்தூர் அவர்களுக்கு அறிவிப்பது யாதெனில்*

*தாங்கள் விவசாய மின் இணைப்பு வேண்டி பதிவு செய்த விண்ணப்ப பதிவு எண் 314/1998–1999 நாள் 02.03.1999 ற்கான 30 நாட்கள் தயார் நிலை பதிவு செய்வதற்கான முன் அறிவிப்பு கடிதம் 03.11.2010 தேதியன்று வழங்கப்பட்டு தாங்கள் 30 நாட்களுக்குள் தயார்நிலை பதிவு செய்யவில்லை. மேலும் உச்ச கால அவகாசத்திற்குள் (90 நாள் கடிதம் முடிந்த தேதியிலிருந்து 5 வருடம்) காலநீட்டிப்பு அனுமதி பெற்று தயார்நிலை பதிவு செய்யாத காரணத்தால் தங்களது மனுமீது நடவடிக்கை எடுக்க இயலாது என இம்மன்றத்தால் தீர்வு காணப்படுகிறது."*

4.0 **<u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 17.11.2021 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு. R. வெங்கடசாமி அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு S. பிச்சை, உதவி செயற்பொறியாளர்/குஜிலியம்பாறை மற்றும் திரு R. ராமசுப்பிரமணியன், உதவி மின்பொறியாளர்/சத்திரப்பட்டி, திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான

ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 திண்டுக்கல் மாவட்டம், புதிய குஜிலியம்பாறை தாலுகா (முன் வேடசந்தூர் தாலுகா) R.வெள்ளோடு கிராமத்தில் வசிக்கும் மேல்முறையீட்டாளர் தனது தோட்டத்திற்கு மேற்கண்ட சர்வே எண் 644-3B க்கு இலவச மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் செய்திருந்ததாகவும், ஆனால் இன்று வரை மின் இணைப்பு தகவல் கிடைக்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 பலமுறை மின் நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றம் மூலம் தனக்கு திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து அழைப்பு வந்ததாகவும், 29.09.2020, 17.11.2020, 15.05.2021, 06.07.2021 ஆகிய தேதிகளில் குறைதீர்க்கும் மன்றத்தில் மனு கொடுத்து தானும் நேரில் ஆஜரானதாகவும், ஆனால் அவர்கள் பலவாறு பதில் அனுப்பி தன்னை அலைக்கழித்துவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 இந்த நிலையில் 06.07.2021 அன்று திண்டுக்கல் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் இருந்து கடிதம் பெறப்பட்டதாகவும், அதன்படி 2000-ஆம் ஆண்டு வரை இலவச மின் இணைப்பு கோரி விண்ணப்பித்த விண்ணப்பங்கள் அனைத்தும் காலாவதி ஆகிவிட்டன என குறிப்பிட்டு உள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேலும் மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் திருப்தி அளிக்கவில்லை என்று குற்றம் சுமத்தி கடிதம் அனுப்பியுள்ளதாகவும், இதன்மீது தக்க நடவடிக்கை எடுத்து மிகவும் வயதான தன் நிலையை கருத்தில் கொண்டு 23.09.2021 அன்று முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள இலவச மின் இணைப்பு திட்டத்தில் தனது மனுவையும் சேர்த்து புதிய ஆணை வழங்கி இலவச மின் இணைப்பை வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மேல்முறையீட்டாளர் சர்வே எண் 644-3B ல் உள்ள விவசாய பூமிக்கு இலவச மின் இணைப்பு வேண்டி கடந்த 02.03.1999 ஆம் வருடம் பதிவு வரிசை எண்

EEND/314/1998–1999 நாள் 02.03.1999–இல் விண்ணப்பித்துள்ளதாகவும், இரண்டு இலட்சம் விவசாய விண்ணப்பதாரர்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கான குறியீடு அரசிடமிருந்து பெறப்பட்டு மேல்முறையீட்டாளருக்கு 30 நாள் அறிவிப்பு கடிதமானது 03.11.2010–இல் அனுப்பப்பட்டதாகவும், மேலும் மக்களின் நலன் கருதி இரண்டு இலட்சம் விவசாய மின் இணைப்பு வழங்கும் திட்டத்தை நாளிதழ் வாயிலாக மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் செய்தி வெளியிடப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 தயார் நிலை அறிவிப்பு கடித நாட்கள் முடிந்து 5 வருட காலத்திற்குள் விண்ணப்பதாரர் விண்ணப்பித்திருந்தால் மட்டுமே தயார்நிலை பதிவு செய்ய அனுமதி வழங்கலாம் எனவும், அவ்வாறு மேல்முறையீட்டாளர் மின்வாரியத்தை தொடர்பு கொண்டதாக கூறியிருந்தாலும் அதற்கான விண்ணப்ப மனு மற்றும் ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேலும் 30 நாட்கள் தயார்நிலை அறிவிப்பு கடிதம் முடிந்து 5 வருடகாலமும் 03.12.2015 அன்றே முடிவடைந்த காரணத்தால் (உச்ச கால அவகாசத்திற்குள் 90 நாள் கடிதம் முடிந்த தேதியிலிருந்து 5 வருடம்) காலநீட்டிப்பு அனுமதி பெற்று தயார்நிலை பதிவு செய்யாததால் மனுவில் குறிப்பிட்டுள்ள விவசாய மின் இணைப்புக்கு தயார்நிலை பதிவு செய்ய இயலாத நிலை உள்ளது என்ற விபரம் மேல்முறையீட்டாளருக்கு எடுத்துரைக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 வெள்ளோடு கிராமம், சர்வே எண் 644/3B–இல் உள்ள தன்னுடைய தோட்டத்திற்கு இலவச மின் இணைப்பு கேட்டு பதிவு எண் EEND314–98–99, நாள் 02.03.1999–இல் பதிவு செய்யப்பட்டதாகவும், ஆனால் இன்று வரை மின் இணைப்பு பற்றிய தகவல் ஏதும் கிடைக்கவில்லையெனவும், 2000–ஆம் ஆண்டு வரை இலவச மின்இணைப்பு கோரி விண்ணப்பித்த விண்ணப்பங்கள் அனைத்தும் காலாவதியாகிவிட்டன என திண்டுக்கல் மின்குறைதீர் மன்றத்தின் ஆணையின் வாயிலாக தெரிவிக்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 இரண்டு இலட்சம் விவசாய விண்ணப்பதாரர்களுக்கு இலவச விவசாய மின் இணைப்பு வழங்குவதற்கான அரசாணையின்படி 03.11.2010 நாளிட்ட 30 நாள் அறிவிப்பு கடிதம் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பப்பட்டதாகவும், நாளிதழ் வாயிலாகவும் அறிவிப்பு வெளியிடப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். 30 நாட்கள் அறிவிப்பு காலக்கெடு முடிந்து மேல்முறையீட்டாளர் கால நீட்டிப்பு கோரி அனுமதி பெற்று மேலும் 5 வருடங்கள் வரை தயார்நிலை பதிவு செய்திருக்கலாமென்றும், அவ்வாறு கால நீட்டிப்பு கோராமலும், 03.12.2015 அன்றே 5 வருட காலம் முடிவடைந்ததாலும், தற்போது தயார் நிலை பதிவு செய்ய இயலாதென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 இலவச விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் பதிவு எண் EEND 314/98-99, நாள் 02.03.1999-இல் தேவையான ஆவணங்களுடன் பதிவு செய்யப்பட்டதாகவும், அதன்பிறகு தனக்கு எந்த அறிவிப்பும் வரவில்லையென மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். தயார் நிலை அறிவிப்பு கடிதம் 03.11.2020-இல் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதற்கான சான்றாக 03.11.2010 நாளிட்ட கடிதத்தின் அலுவலக நகலை எதிர்மனுதாரர் சமர்ப்பித்துள்ளார். ஆனால் அக்கடிதம் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பப்பட்டதற்கான அலுவலக முத்திரையுடன் கூடிய நகல் (office copy with dispatch seal), அல்லது தபால் துறை வாயிலாக அனுப்பப்பட்டதற்கான முத்திரையுடன் கூடிய ஆதார ஆவணம், அல்லது தனியார் கூரியர் சேவையின் மூலமாக அனுப்பியதற்கான ஆதார ஆவணம் எதுவும் எதிர்மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறு அனுப்பப்பட்ட தயார் நிலை அறிவிப்பு கடிதம் மேல்முறையீட்டாளர் பெற்றுக் கொண்டதாகவோ, அல்லது திரும்ப கிடைக்கப்பெற்றதாகவோ எந்தவொறு ஆவணத்தையும் எதிர்மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை. எனவே, தயார் நிலை அறிவிப்பு கடிதம் மேல்முறையீட்டாளருக்கு கிடைக்கவில்லையென கருதுகிறேன். இந்நிலையில், தயார்நிலை பதிவு செய்ய தெரிவித்துள்ள காலக்கெடு 30 நாட்கள் முடிந்து மேலும் கால அவகாசம் வேண்டி மேல்முறையீட்டாளர் கோரவில்லையென்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதல்ல. மேலும் நாளிதழ் வாயிலாக வெளியிடப்பட்ட அறிவிப்பு அரசு மக்களுக்கு தெரிவித்த பொது அறிவிப்பாகத்தான் கருத முடியுமே தவிர மேல்முறையீட்டாளருக்கு எதிர்மனுதாரர் வெளியிட்ட அறிவிப்பாக கருத முடியாது.

7.5 தயார் நிலை பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள காலக்கெடு சம்பந்தமாக தலைமை பொறியாளர் திட்டமிடல் அவர்களின் 20.09.2009 நாளிட்ட சுற்றறிக்கை கடிதத்தில் கூறப்பட்டுள்ள தேவையான பத்திகளின் உண்மை நகல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"1. In cases of delay in reporting readiness of agricultural applications even beyond the extended period of one year, extension of time may be given to the original applicant/ legal heirs, as the case may be for entering readiness upto 5 years from the date of expiry of 90 days notice period once the party has attained the normal seniority. However, this should not be applicable to purchaser of the land who purchases the land after expiry of 90 days notice.*

*2. The applications which were kept pending (except court case/ dispute case after completing 5 years from the date of expiry of 90 days notice period may be cancelled and intimated to the applicant.*

*3. Cancelled applications need not be revoked.*

*4. Applicants whose applications released / readiness entered, but supply was not availed due to court case / dispute supply may be effected without any time limit, if the case is ended in favour of the applicant on priority. The receipt of this letter may be acknowledged."*

7.6 மேற்கண்ட ஆணையினை கூர்ந்து படிக்கும்போது நாம் அறிவது, ஒரு விவசாய மின் இணைப்பு வேண்டும் விண்ணப்பதாரர் தன்னுடைய தயார் நிலையை பதிவு செய்யாத பட்சத்தில் 90 நாட்கள் அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டு 5 வருடங்கள் கழிந்த விவசாய விண்ணப்பங்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும், அவ்வாறு ரத்து செய்த விவரம் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிகிறது. இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் விவசாய விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாகவோ, அவ்வாறு ரத்து செய்யப்பட்டதாக மேல்முறையீட்டாளருக்கு தெரிவித்ததாகவோ எந்தவொரு ஆவணமும் எதிர்மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்நிலையில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாகக் கருதமுடியாது.

7.7 எனவே, தயார் நிலை அறிவிப்பு கடிதம் மேல்முறையீட்டாளருக்கு கிடைக்கப்பெறாததாலும், பதிவு செய்யப்பட்ட விண்ணப்பம் ரத்து செய்யப்படாததாலும், மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுத்து புதியதாக தயார் நிலை அறிவிக்கை கொடுத்து விவசாய மின் இணைப்பு வேண்டும் மேல்முறையீட்டாளருக்கு தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி தேவைப்படும் ஆவணங்களை பெற்றுக் கொண்டு விண்ணப்ப பதிவு எண் EEND/314/1998-99–க்கு மின் இணைப்பு வழங்குமாறு தீர்வு செய்கிறேன்.

## 8.0 முடிவுரை:

8.1 பத்தி 7–இல் உள்ள தீர்வின்படி புதியதாக தயார்நிலை அறிவிக்கை கொடுத்து தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி தேவைப்படும் ஆவணங்களை பெற்றுக்கொண்டு விண்ணப்ப பதிவு எண் EEND/314/1998–1999 நாள் 02.03.1999–க்கு விவசாய மின் இணைப்பு மேல்முறையீட்டாளருக்கு வழங்குமாறு தீர்வு செய்கிறேன். மேல்முறையீட்டாளர் ஆவணங்களை சமர்ப்பித்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் மின் இணைப்பு வழங்குமாறு ஆணையிடுகிறேன்.

8.2 மேற்கண்ட ஆணையை நிறைவேற்றியமைக்கான அறிக்கையை மின் இணைப்பு வழங்கிய தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறேன்.

8.3 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண் 75/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

பெறுநர்:

1. திரு. R. வெங்கடசாமி,
s/o. ரங்கசாமி,
R.வெள்ளோடு கிராமம்,
வேடசந்தூர் தாலுக்கா,
திண்டுக்கல் மாவட்டம்.

2. செயற்பொறியாளர்/வடக்கு/திண்டுக்கல்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மீனாட்சிநாயக்கன்பட்டி அஞ்சல்,
திண்டுக்கல் – 624 002.

3. உதவி செயற்பொறியாளர்/குஜிலியம்பாறை,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திண்டுக்கல் மெயின் ரோடு,
குஜிலியம்பாறை – 624 703.

4. உதவி மின்பொறியாளர்/சத்திரப்பட்டி,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11KV SS வளாகம் சத்திரப்பட்டி,
வேடசந்தூர் தாலுக்கா, திண்டுக்கல் – 624 620.

5. மேற்பார்வை பொறியாளர், – By email
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மீனாட்சிநாயக்கன்பட்டி அஞ்சல்,
திண்டுக்கல் – 624 002.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.